**<u>STARTING TIME 10.57 A.M</u>**

**<u>IN THE COURT OF THE SPECIAL SUBORDINATE JUDGE (LAOP CASES), ARAKKONAM.</u>**

**<u>O.S. No. 171/2019</u>**

Deposition of **<u>P.W.1</u>** witnesses for Plaintiff Solemnly affirmed by Tmt. S. Ranjitha, Gr. II Bench Clerk of this court, on 19.11.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : **ஆனந்தா** | Husband Name | : |
| Address | : | | |
| Calling | : | Age | : |

**<u>1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1. இவ்வழக்கை நாங்கள் யார் யார் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது மூத்தார் மகன் வெங்கடேசன் என்பவர் மீது மட்டும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் ஆமாம். நான் இவ்வழக்கில் 1ம் வாதி என்றால் சரிதான். இவ்வழக்கின் 2 முதல் 7 வரை வாதிகள் எனது மகள்கள் மற்றும் மகன்கள் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் எனது மக்களான 2 முதல் 7 வரை வாதிகளுக்கும் சேர்த்து சாட்சியம் அளிக்கிறேனா என்றால், ஆமாம்.**

**2. தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால், ஆயர்பாடி கிராமத்தில் உள்ளது. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியவில்லை, ஆனால் சொத்து இருப்பது தெரியும். தாவா சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் 25 செண்ட்டிற்காக இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம். என்ன பரிகாரம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால்,**

இவ்வழக்கு சொத்தில் பாகம் கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

3. தாவா சர்வே எண் 245/1எ–ல் உள்ள 50 செண்ட் சொத்தை எனது கணவரின் அண்ணனான சீனிவாச நாயுடு என்பவர் சுயார்ஜிதமாக கிரையம் பெற்ற சொத்து என்றால் சரியல்ல. சீனிவாச நாயுடு மேற்படி 50 செண்ட் சொத்தை எந்த வருடம், யாரிடமிருந்து, எவ்வளவு தொகைக்கு கிரையம் வாங்கினார் என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியாது, ஆனால் கிரையம் பெற்ற பிறகு பத்திரத்தை எடுத்து வந்து சொத்தை வாங்கியிருப்பதாக சொல்லி என்னிடம் கொடுத்தார். என்னிடம் கொடுத்த அந்த கிரைய பத்திரமான வா.சா.ஆ–1–ல் உள்ள கிரைய தொகையை, கிரையம் செய்தவர்களுக்கு சீனிவாச நாயுடு தான் கொடுத்ததாக உள்ளது என்றால் சரிதான்.

4. வா.சா.ஆ–1 ஆன 07.03.1984 தேதியிலிருந்து சீனிவாச நாயுடு தான் அந்த 50 செண்ட் சொத்தையும் அனுபவித்து வந்துள்ளார் என்றால், சரிதான். பட்டாவை சீனிவாச நாயுடு அவர் பெயரில் தான் பெற்றுள்ளார் என்றால், சீனிவாச நாயுடு வாங்கவில்லை, அவரது மகனான வெங்கடேசன் தான் வாங்கியுள்ளார். அந்த 50 செண்ட் சொத்திற்குண்டான பட்டாவை வெங்கடேசன் தான் வாங்கினார் என்ற விவரத்தை தாவாவிலும், பிரமாண வாக்குமூலத்திலும் சொல்லி உள்ளேனா என்றால் இல்லை.

5. எனது மாமனார் பெயர் போடி நாயுடு என்றால் சரிதான். அவருக்கு கோவிந்தராஜ், சீனிவாசலு, பக்தவசலு, மணி என்ற 4 மகன்கள் மற்றும் ஜெயம்மாள், காமாட்சி, கமலா என்ற 3 மகள்கள் என்றால் சரிதான். போடி நாயுடுவிற்கு பூர்வீகமாகவும், சுயமாகவும் சம்பாதித்த சொத்துக்கள் இருந்தது என்றால் சரிதான். அதுபோல் எவ்வளவு சொத்துக்கள் இருந்தது என்றால் 1–1/2 ஏக்கர் இருந்தது. போடி நாயுடுவிற்கு மொத்தம் ஏக்கர் 2.65 செண்ட் நிலம் இருந்தது என்றால், இருக்கலாம்.

6. என் மாமனார் எந்த வருடம் காலமானார் என்றால், சுமார் 50, 60 வருடத்திற்கு முன்பு காலமாகிவிட்டார். எனது மாமனார் உயிருடன் இருந்தபோதே அவரது மகன்கள் மற்றும் மகள்கள் அனைவருக்கும் திருமணம் செய்து வைத்தார் என்றால் சரிதான். திருமணமான பிறகு மகன்களுக்கு தனிகுடித்தனம் செய்து வைத்திருந்தார்.

7. எனக்கும் பக்தவசலுக்கும் எப்போது திருமணம் நடந்தது என்றால், எனக்கு 22 வயதாக இருந்த போது திருமணம் நடந்தது. தற்போது எனக்கு என்ன வயது என்றால் 65 வயது ஆகும்.

8. என் மாமனார் விட்டு சென்ற சொத்துக்களை அவரது வாரிசுகள் எழுத்து மூலமாக பாகம் பிரித்து கொண்டார்களா என்றால் இல்லை, இதுநாள் வரை கூட்டாகவே உள்ளது. போடி நாயுடுவிற்கு சொந்தமான சொத்துக்கள் அவரது காலத்திற்கு பிறகு எழுத்து மூலமாகவோ, வாய் மூலமாகவோ பாகம் பிரித்து கொள்ளவே இல்லை என்று சொல்கிறேனா என்றால் ஆமாம்.

9. எனது மாமனாருக்கு சொந்தமான சொத்துக்கள் பாகம் பிரித்து கொள்ளவில்லை என்று சொல்வதால், அச்சொத்துக்களுக்கான பட்டா கூட்டாக உள்ளதா அல்லது தனித்தனியாக உள்ளதா என்றால், இதுநாள்வரை கூட்டாக தான் உள்ளது.

10. வா.சா.ஆ–1 மூலம் சீனிவாச நாயுடு கிரையம் பெற்ற 50 செண்ட் சொத்திற்கு எனது கணவர் பெயரிலோ அவர் உடன் பிறந்த சகோதரர்களான கோவிந்தராஜ் மற்றும் மணி நாயுடு என்பவர்கள் பெயரிலோ எந்த ஆவணமும் இல்லை என்றால் சரிதான்.

11. எனது கணவர் எந்த வருடம் காலமானார் என்றால் நினைவில்லை, ஆனால் சுமார் 25 வருடங்கள் ஆகிறது. என் கணவரின் சகோதரர் கோவிந்தராஜ் நாயுடுவும் காலமாகிவிட்டார் என்றால் சரிதான். பராசுராமன் மற்றும் தேவேந்திரன்

என்பவர்கள் கோவிந்தராஜ் நாயுடுவின் மகன்கள் என்றால் சரிதான், அதில் தேவேந்திரன் காலமாகிவிட்டார்.

12. 1ம் பிரதிவாதியின் கணவரும் 2 முதல் 6 வரை பிரதிவாதிகளின் தகப்பனாருமான சீனிவாச நாயுடு எப்போது காலமானார் என்றால் அவரும் சுமார் 25 வருடங்களுக்கு முன் காலமானார். என் கணவரின் உடன் பிறந்தவர்களில் யார் யார் தற்போது உயிருடன் உள்ளார்கள் என்றால், மணி என்ற தம்பியும், காமாட்சி என்ற தங்கையும் உயிருடன் உள்ளார்கள்.

13. வா.சா.ஆ–1 ஆவணம் மூலம் சீனிவாச நாயுடு கிரையம் பெற்ற சொத்து அவருக்கு மட்டும் பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல, அந்த சொத்தை எனது கணவர் தான் வாங்கி அவர் அண்ணன் பெயரில் எழுதி வைத்தார், அதில் எங்களுக்கும் பாகம் உள்ளது. அதுபோல் எனது கணவர் அவரது அண்ணன் சீனிவாசநாயுடு பெயரில் 50 செண்ட் சொத்தை கிரையம் வாங்கியதாக சொல்வது தவறு என்றும், அந்த சொத்தை சீனிவாச நாயுடு அவரது தன் சொந்த பணத்தை கொண்டு சுயமாக கிரையம் பெற்ற சொத்து என்றால் சரியல்ல.

14. வா.சா.ஆ–1 ஆவணம் மூலம் சீனிவாச நாயுடு கிரையம் பெற்ற சொத்தை என் கணவர், அவரது அண்ணன் சீனிவாச நாயுடு பெயரில் கிரையம் பெற்றார் என்று சொல்வதால், அந்த சொத்தை எனது கணவரும், அவரது உடன் பிறந்தவர்களும் கூட்டாக அனுபவித்து வந்தார்கள் என்று சொல்வதற்கு ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அந்த சொத்தை 4 சகோதரர்களும் கூட்டுக்குடும்ப சொத்தாக பாவித்து அனுபவித்து வந்தார்கள் என்பதற்கும் ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை, அந்த 50 செண்ட்டில் 25 செண்ட் சொத்தை சீனிவாச நாயுடு என் கணவருக்கு பிரித்து கொடுத்தார். அவ்வாறு பிரித்துக் கொடுத்ததாக சொல்வதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

அதுபோல் எப்போது பிரித்துக் கொடுத்ததாக சொல்வது எப்போது என்றால் எனக்கு திருமணமான 15 ஆண்டுகளுக்கு பிறகு பிரித்து கொடுத்தார்.

15. தாவா சொத்தை தவிர வேறு ஏதேனும் சொத்துக்கள் சீனிவாச நாயுடு பெயரில் உள்ளதா என்றால், வேறு ஒரு 50 செண்ட் சொத்தும் உள்ளது, அந்த 50 செண்ட் சொத்தையும் சகோதரர்கள் 4 பேரும் கூட்டா சம்பாதித்த பணத்தை கொண்டு தான் கிரையம் பெறப்பட்டது. அந்த சொத்தைபொறுத்து, நாங்களோ கோவிந்தராஜ் மற்றும் மணி ஆகியோரின் வாரிசுகளோ வழக்கு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. அந்த மற்றொரு 50 செண்ட் சொத்தும் சீனிவாச நாயுடு பெயரில் பட்டா வாங்கி அவரது காலத்திற்கு பிறகு அவரது வாரிசுகள் பெயரில் மாற்றப்பட்டுள்ளது என்றால், சீனிவாச நாயுடு அவர் பெயரில் வாங்கவில்லை அவரது வாரிசுகள் தான் வாங்கி உள்ளார்கள்.

1 முதல் 6 வரையிலான பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.

ENDING TIME 11.42.A.M.

G YUVARAJ

Special Sub Judge, Arakkonam

Digitally signed by G YUVARAJ
Date: 2024.11.19 15:44:18 +0530